இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 130 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 05 – சனிக்கிழமை 20 டிசம்பர் 2025 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 130 : Thiruvalluvar Year - 2056 - Margazhi 05 - Saturday 20 December 2025 - Kovai ★★ 16 Pages ₹ 5.00




## இனமானப் பெருந்தகைக்கு 103 ஆம் பிறந்த நாள்!

**முதல்வர் மு.க.ஸ்டாலின்**

இனமானப் பெருந்தகைக்கு 103 ஆம் பிறந்த நாள்!
கொள்கையில் பெரியாராய் –
இன உணர்வில் அண்ணாவாய் –
இருந்து; தலைவர் கலைஞருக்கு - வாழ்ந்த காலமெல்லாம் காக்கும் தோழனாய் வலம் வந்தவர் பேராசிரியர்.
என்னை வழிநடத்தியவர் மட்டுமல்ல, என்னை தலைமைக்கான தகுதிபடைத்தவன் என்று முதலில்
அறிவித்த பெருந்தகையும் அவர்தான்.
இனமானம், தன்மானம், மொழிமானம் காக்க பேராசிரியர் எந்நாளும் வழிநடத்திக் கொண்டே இருக்கிறார்.
பேராசிரியர் இயக்கத்தின் அடையாளம்.
அவரைப் போற்றுவோம்.
அவர் வழிநடப்போம்!

- கழகத் தலைவர்
**முதல்வர் மு.க.ஸ்டாலின்**

---

### ‘திராவிட மாடல்’ ஆட்சியில்

# பெண்களுக்கு சாதனை படைக்கும் திட்டங்கள்!

## கொளத்தூரில் 15 இணைகளுக்கு திருமணத்தை நடத்திவைத்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, டிச.20-**

**“திராவிட மாடல் ஆட்சியில் பெண்களுக்கு சாதனை படைக்கும் திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொளத்தூரில் 15 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து வாழ்த்தி உரையாற்றும்போது கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.12.2025) சென்னை, கொளத்தூர், ஜி.கே.எம்.காலனியில் அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையை திறந்து வைத்து, 15 இணைகளுக்கு திருமணத்தை நடத்திவைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி, ஆற்றிய உரை வருமாறு:-

கொளத்தூருக்கு வந்தால், ஒரு எனர்ஜி வந்துவிடும்; ஒரு உற்சாகம் வந்து விடும்; வேகம் வந்துவிடும்; ஒரு புத்துணர்ச்சி வந்துவிடும்; அது எனக்கு மட்டுமல்ல, உங்களுக்கும் நன்றாக தெரியும்.

அதிலும், மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்களை எல்லாம் நான் பார்க்கிறேன். மணமக்களோடு இந்த விழாவில் நாம் எல்லாம் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்ற விழாவாக இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நம்முடைய குடும்பத்தில் ஒரு திருமண நிகழ்ச்சி நடந்தால், எப்படி மகிழ்ச்சியாக கலந்து கொள்வோமோ அதுபோல தான் இந்த திருமண நிகழ்ச்சியில் அத்தனை பேரும், நான் மட்டுமல்ல, நம்முடைய அமைச்சர் பெருமக்கள் மட்டுமல்ல, வந்திருக்கக்கூடிய அத்தனை



பேரும், அந்த உணர்வோடு தான் இந்த விழாவில் கலந்து கொண்டிருக்கிறோம்.

யாராவது, “கொளத்தூர்” என்று பெயர் சொன்னாலே அது சாதனை! இல்லையென்றால் ஸ்டாலின்! என்று ஞாபகத்திற்கு வரக்கூடிய அளவிற்கு இந்த தொகுதியில் நான் இரண்டற கலந்திருக்கிறேன் என்று உங்களுக்கெல்லாம் நன்றாக தெரியும். ஏராளமான திட்டங்களை இந்தத் தொகுதிக்கு நிறைவேற்றி, இந்த கொளத்தூர் தொகுதியை நம்முடைய அமைச்சர் நேரு அவர்கள் சொன்னது போல, 234 தொகுதிகளுக்கு நான் இந்தத் தொகுதியை பார்க்கின்றபோது எங்களுக்கு பெருமையாக இருக்கிறது; மகிழ்ச்சியாக இருக்கிறது. பயமும் இருக்கிறது என்றும் சொல்லலாம்.

அதுமட்டுமல்ல, உங்களுக்கெல்லாம் பொறாமையும் இருக்கிறது அதுதான் உண்மை. கெட்ட எண்ணத்தில் அந்த பொறாமை இல்லை; நல்லெண்ணத்தில் தான் பொறாமையாக இருக்கிறது.

நாமும் இப்படி பணியாற்ற வேண்டும்; நம்முடைய தொகுதிக்கு இந்த திட்டங்கள் வரவேண்டும் என்பதில் அவர்களும் இன்றைக்கு அந்தப் பணியை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ கொளத்தூருக்கு மட்டும் நாம் இதை செய்துவிட்டோம் - மற்ற தொகுதியை கைவிட்டுவிட்டோம் என்று யாரும் நினைக்க வேண்டாம் - அனைத்துத் தொகுதியும் நம்முடைய தொகுதிதான். அதனால், எல்லார்க்கும் எல்லாம் என்பதை முன் வைத்து நம்முடைய பணியை ஆற்றிக் கொண்டிருக்கிறோம்.

என்ன சிறப்பு என்றால், ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாதத்திற்கு ஒரு முறை, இரண்டு மாதத்திற்கு ஒரு முறை நான் செல்வேன். ஆனால் கொளத்தூருக்கு மட்டும் எப்படியாவது 10 நாட்களுக்கு


**தொடர்ச்சி 3ஆம் பக்கம்**


---

### அமெரிக்க வரி விதிப்பினால் தமிழ்நாட்டில் ஏற்றுமதி பாதிப்பு!

# இந்திய - அமெரிக்க ஒப்பந்தம் மூலம் விரைவில் தீர்வு காண்பீர்!

## பிரதமருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, டிச.20-**

**இந்தியப் பொருட்கள் மீதான வரிவிதிப்பினால், தமிழ்நாட்டில் ஏற்றுமதி துறைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு, இந்திய - அமெரிக்க இருதரப்பு ஒப்பந்தம் மூலம் விரைவில் தீர்வு காண்பதற்கு முன்னுரிமை அளிக்குமாறு கேட்டு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு நேற்று முன்தினம் (18.12.2025) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் இந்தியப் பொருட்களுக்கு 50 விழுக்காடு வரி விதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், தமிழ்நாட்டின் ஏற்றுமதித் துறைகளில் அதிகரித்து வரும் நெருக்கடிகள் குறித்து அவசரமாகவும், கவலையோடும் இதனை எழுதுவதாகக் குறிப்பிட்டுள்ளார். தமிழ்நாடு, இந்தியாவின் ஜவுளி மற்றும் ஆடைத் துறை ஏற்றுமதியின் அடித்தளமாக விளங்குகிறது என்றும், நாட்டின் ஜவுளி ஏற்றுமதியில் 28 விழுக்காடு அளவிற்குப் பங்களிப்பினை வழங்குவதுடன், சுமார் 75 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குகிறது என்றும்




தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இந்தியாவின் தோல் பொருட்கள் மற்றும் காலணி ஏற்றுமதியிலும் 40 விழுக்காடு அளவிற்கு முக்கியப் பங்காற்றி, 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

**சமூக இழப்பினை ஏற்படுத்தும்!**

அமெரிக்க வரிவிதிப்பினால் தற்போது வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள இடர்பாடு என்பது வெறும் பொருளாதாரப் பின்னடைவு மட்டுமல்ல; ஈடு செய்ய முடியாத சமூக இழப்பினை ஏற்படுத்தும் மாபெரும் சவாலாகும் என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இந்தியாவின் பின்னலாடைத் தலைநகரமான திருப்பூரில், உறுதிப்படுத்தப்பட்ட ஆர்டர்களில் ஏற்றுமதியாளர்களுக்கு 15,000 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், நிறுவனங்களில் 30 விழுக்காடு வரை கட்டாய உற்பத்திக் குறைப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அதோடு, புதிய ஆர்டர்களும் கவலை அடையும் அளவிற்குக் குறைந்து வருவதாக தனது கடிதத்தில் தெரிவித்துள்ள அவர், திருப்பூர், கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள ஏற்றுமதியாளர்களுக்கு தினமும் 60 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் பல சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் சரிவின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டுள்ளன என்றும், வேலூர், இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள காலணி உற்பத்தி நிறுவனங்களிலும் இதே போன்ற மோசமான சூழ்நிலை காணப்படுவதாகவும் கவலையோடு குறிப்பிட்டுள்ளார்.

**இலட்சக்கணக்கானோரின் வேலைவாய்ப்பு பறிபோகும்!**

தற்போது விதிக்கப்பட்டுள்ள இந்த வரியின் காரணமாக, ஏற்றுமதியாளர்கள் இலாபத்தினைக் குறைத்து, தங்கள் வாடிக்கையாளர்களைத் தக்க வைத்துக்கொள்வதற்காக பெருமளவில் தள்ளுபடிகளை வழங்கிட வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகியுள்ளதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இது அவர்களின் போட்டித்தன்மை மற்றும் நம்பகத்தன்மையைக் குலைக்கும் வகையில் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாக, இலட்சக் கணக்கான வேலைவாய்ப்புகள் பறிபோகும் நிலை உள்ளதாகவும், ஏற்கனவே இந்தத் துறைகள் பணி இழப்புகளையும், ஊதிய ஒத்தி வைப்புகளையும் சந்தித்து வருகின்றன என்றும், இது சமூகத்தில் நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தி அச்சுறுத்து வதாகவும் அவர் தனது கடிதத்தில் கவலைபடத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சூழ்நிலையை மேலும் மோசமாக்கும் வகையில், சர்வதேச இறக்குமதியாளர்கள், தங்களது ஆர்டர்களை, வியட்நாம், பங்களா தேஷ் மற்றும் கம்போடியா போன்ற நாடுகளிலுள்ள போட்டி யாளர்களிடம், அங்கு வரிவிதிப்பினால் கிடைக்கும் நன்மையைக் கருத்தில்கொண்டு விரைவாக வழங்கி வருவதாகவும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இதன் காரணமாக, சர்வதேச சந்தை வாய்ப்புகளை இழந்து, மீண்டும் வாய்ப்புகளைத் திரும்பப் பெறுவது என்பது பெருத்த சவாலாக இருக்கும் என்றும், இது நமது இளைஞர்களின், குறிப்பாக பெண்களின் எதிர்கால வேலைவாய்ப்புகளுக்கு அச்சுறுத்தலான, நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்துகிறது என்றும் கவலையோடு குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சூழலில், இந்திய அமெரிக்க இருதரப்பு ஒப்பந்தம் மூலம் இந்த வரிச் சிக்கலை விரைவில் தீர்ப்பதற்கு முன்னுரிமை அளிக்குமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், விரைவான தீர்வின் மூலமாக நமது ஏற்று மதியாளர்களின் வணிக நிலையை மீட்டெடுப்பதோடு, உலக அளவில் உலகளாவிய உற்பத்தி மையமாக இந்தியாவின் நிலையை வலுப்படுத்திட இயலும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

எனவே, நிலையான வர்த்தகத்தை வளர்த்தெடுப்பதற்கும், உள்நாட்டு தொழில்கள் மற்றும் வேலைகளைப் பாதுகாப்பதற்கும் இந்தியப் பிரதமர் கொண்டுள்ள உறுதிப்பாட்டின் மீது நம்பிக்கையுடன் இருப்பதால், அமெரிக்க வரிவிதிப்பினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு விரைவில் தீர்வுகாண வேண்டுமென தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.